
# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

2015 செப்டெம்பர் ~ ஒக்டோபர் ~ நவம்பர் வெளியீடு



நீ எறும்பினிடத்தில் போய்,
அதின் வழிகளைப் பார்த்து,
ஞானத்தைக் கற்றுக்கொள்.
நீதிமொழிகள் 6:6

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகளடங்கிய,
ஆவிக்குரிய வாழ்வில்
வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக்கூடிய
**ஜீவ ஒளி** சஞ்சிகையை வெளியிடுவதில்
நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம்.
இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள்
ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைவதும்
இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக
ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக
ஏற்றுக்கொள்வதுவுமே
எங்களுடைய ஜெபமாயுள்ளது. கிறிஸ்தவ
ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச
சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள்
பெற்றுக்கொள்ள விரும்பினால்
கடைசி பக்கத்திலுள்ள கூப்பனை பூர்த்தி
செய்து கீழ்வரும்
முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி,**
**வெள்ளவத்தை, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
www.christianfellowshipcentre.com

# சபையின் மூலமாய்

**“உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக” எபேசியர் 3:10.**

தேவாலயம் கட்டப்படவேண்டிய மாதிரியின் விவரங்கள் யாவற்றையும் தேவன் தாவீதினிடம் ஒப்புவித்த நாளே அவனுடைய வாழ்க்கையில் மிகவும் அற்புதமான நாளாயிருந்தது. (1 நாளா 28:19). அதனை ஏற்கனவே அல்லது தாவீதினுடைய வாழ்க்கையின் துவக்கத்திலேயே தேவன் அவனுக்கு வெளிப்படுத்தி இருக்க முடியாது. இந்த வெளிப்பாட்டை அவனுக்குத் தெரிவிப்பதற்கு முன்பாக தாவீது ஆவிக்குரிய பிரகாரமாய் தேவையான வளர்ச்சி பெறும் வரை தேவன் அவனுக்காக காத்திருக்க வேண்டியதாயிற்று.


“சபை” என்றும் “கிறிஸ்துவின் சரீரம்” என்றும் மிகச் சாதாரணமாக அநேகர் இந்நாட்களில் பேசிக்கொள்கிறார்கள். ஆனால் இவற்றின் பொருளை வெகு சிலரே அறிந்திருக்கின்றனர்.

சபையைப் பற்றிய தேவனுடைய எண்ணத்தை அறிந்தவர்கள் அரிதாகவே காணப்படுகின்றனர். அநேகர் பேசுகின்ற ஆவிக்குரிய பாஷையின் நடுவிலும் அவர்களுடைய பொறாமைகள், போராட்டங்கள், வாழ்க்கையிலுள்ள முரண்பாடுகளைப் பார்க்கும் பொழுது, அவர்கள் அறிந்திருக்கிறோம் என்று சொன்ன போதிலும் அவர்கள் ஒன்றும் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரிய வேண்டுமென்ற நோக்கத்தோடேயே தேவன் தமது சபையுடன் ஐக்கியம் கொண்டிருக்கிறார்.

அனுதின தேவ இரகசியத்திலிருந்து
சகோ. பக்த் சிங்



# ஒருவன் மற்றவன்



மதியம் பன்னிரண்டு. உச்சந்-தலைக்கு நேராய் முழு பலத்தோடு பிரகாசிக்கும் சூரியன் நிற்க, வெட்ட-வெளியில் ஓர் கூட்டம், தகாததொன்-றையும் நடப்பிக்காத தேவனுடைய பரிசுத்த குமாரன் அக்கிரமக்காரரில் ஒருவனாக அந்தரத்தில் தொங்கிக்-கொண்டிருப்பதை மேலே அண்ணாந்து பார்த்த வண்ணம் இருந்த அந்க அகோர நேரத்திலே பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. சூரியன் இருளடைந்-தது. தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக கிழிந்தது. "பிதாவே! உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்-கிறேன்" என மகா சத்தமாய்க்கூப்பிட்டுச் சொல்லி ஜீவனை விட்டார் இயேசு. பூமி அதிர்ந்தது. கன்மலைகளும் பிளந்தன. கல்லறைகளும் திறந்தன.

சம்பவங்கள் இப்படி நடக்கும் போது அவ்விடத்தில் நீங்கள் இருந்து இவற்றை உங்கள் கண்களாலேயே கண்டு உங்கள் காதுகளாலேயே கேட்டிருந்தால் உங்கள் மனநிலை எப்படியிருக்கும்?

நமது நேரத்தின்படி காலை ஒன்பது மணியாகிய மூன்றாம் மணி வேளையில் பாவம் அறியாத இயேசு அக்கிரமக்காரராகிய நமக்காக சிலுவையில் அறையப்பட்டார். அவரோடு கூட கள்ளரும் குற்றவாளிகளுமாகிய வேறிரண்டு பேரை அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் இடது பக்கத்தில் ஒருவனும் இயேசுவை நடுவிலுமாக சிலுவையில் அறைந்தார்கள்.

நின்று பார்த்துக்கொண்டிருந்த ஜனங்களும் அவர்களுடனே கூட அதிகாரிகளும் அவரை இகழ, போர்ச்-சேவகரும் அவரை பரியாசம் பண்ண, அவரோடே கூட சிலுவைகளில் அறையப்பட்டவர்களும் அவரை நிந்-தித்தார்கள்.

பாவம் செய்யாத நீதிபரர் இயேசுவின் வாயிலேயோ வஞ்சனை காணப்படவில்லை. அவர் வையப்படும் போது பயமுறுத்தாமலும் நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்-படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்.

அன்றியும் சிலுவையில் அறையப்-பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்-பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம், நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அப்பொழுது ஏறக்குறைய மாலை மூன்று மணி. முழு உலகத்தின் பாவமும் அவர் மேல் போடப்பட்டதாலே

மனுஷனைப் பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனு புத்திரரைப்-பார்க்கிலும் அவருடைய ரூபமும், அவரைக்கண்ட அநேகர் பிரமிப்பு அடையத்தக்க அளவுக்கு அந்தக்கேடு அடைந்தது. அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை, அவரைப்-பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்-தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்-தவருமாயிருந்தார். பாவத்தைப்-பார்க்கக்கூடாத சுத்தக்கண்ணனாகிய தேவன் இமைப்பொழுது தம் முகத்தை மறைத்துக்கொண்ட போது, இமைப்-பொழுதுதேவனால்கைவிடப்பட்டவராய் “என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்” என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்.




உண்மையில் நடந்தது என்ன? மெய்யாகவே அவர் நம்முடைய பாடு-களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது.

சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன் இதை உணராமல் அவரை இகழ்ந்தான். மற்றவன் இதை உணர்ந்தவனாய் இயேசுவோடு கூட பரதீசுக்கு செல்லும் பாக்கியம் பெற்றான்.

சிலுவையில் அறையப்பட்டிருந்த அவ்விரு கள்ளர்களினதும் கதை அங்கே முடியவில்லை.

இயேசு தம் ஆவியை பிதாவின் கையில் ஒப்புவித்த பின்னரும் அந்தக்-குற்றவாளிகள் இருவரும் உயிருடன் தான் இருந்தனர். அதனால் தான் போர்ச்சேவகர் வந்து, அவ்விருவரில் ஒருவனுடைய காலெலும்புகளையும் மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள். இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை.

இதுவே பரிதாபத்தின் உச்ச-கட்டம். இன்று நாம் இயேசுவின் மரணத்தைக் காணாமல் வேதம் சொல்வதை விசுவாசித்து பாவ மன்னிப்-பையும் இரட்சிப்பையும் பெற்றுக்-கொள்கிறோம். ஆனால் அவருடனேயே கூட சிலுவையில் அறையப்பட்டிருந்தும் அவருக்கு சம்பவித்த யாவையும் ஆறு மணிநேரமாக நடைபெற்ற அசாதாரண சம்பவங்கள், இயற்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் அனைத்தையும் தன் கண்களாலேயே கண்டு, தானே அவ்விடத்தில் இருந்து அனுபவித்த குற்றவாளிகளில் ஒருவன் அவரை விசுவாசிக்கவில்லை. அவனால் அவரை விசுவாசிக்க முடியவில்லை. பரதீசை, பாவ மன்னிப்பை இழந்தான். தேவ-னுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராத-படியினால் ஆக்கினைத்தீர்ப்புக்குட்-பட்டான்.

ஆகவே அருமையானவர்களே, இரட்சகர் இயேசு தரும் இலவச

இரட்சிப்பை, பாவ மன்னிப்பை நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள அவரை நாம் விசுவாசிப்பது மட்டுமே அவசியம் ஆகையால், அவரை விசுவாசிப்பதற்கு காரணங்களைக் கேளாதீர்கள், தடயங்களைத் தேடாதீர்கள், ஆதாரங்கள் அடையாளங்களை ஆராயாதீர்கள். சிலுவையில் அறையப்பட்டிருந்த மற்றனைப்போல எளிமையாய் அவரை விசுவாசியுங்கள். "இயேசுவே! பாவியாகிய என் மேல் இரக்கமாயிரும்" என்று சொல்லுங்கள். "என்னை மன்னியுங்கள்" என்று சொல்லுங்கள்.

கண்ணாரக்கண்டும் விசுவாசியாத அந்த கள்ளரில் ஒருவனைப் போல இருதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு இருக்கப்போகின்றீர்களா? அல்லது இன்று அவருடைய சத்தத்தைக்கேட்பீர்களாகில் உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாமல் இருதயக்கதவைத் திறந்து அந்த கள்ளரில் மற்றவனைப் போல இயேசுவை ஏற்றுக்கொள்ளப்போகின்றீர்களா?

அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.

"இயேசுவே! பாவியாகிய எனக்காக நீர் சிலுவையில் மரித்தீர் என்றும் உயிர்தெழுந்தீர் என்றும் நம்பி விசுவாசிக்கிறேன். என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளும். ஆமென்."

ஆதாரம்:

மத்தேயு 27
மாற்கு 15
லூக்கா 23
யோவான் 19,
ஏசாயா 52, 53
1 பேதுரு 2:24
யோவான் 5:24
ரோமர் 4:25

-S. வரபிரசாத்-

## எபிரேயர் புத்தகத்தில் இயேசு கிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்டுள்ள பட்டங்கள்

| | |
|---|---|
| சர்வத்துக்கும் சுதந்தரவாளி | - வசனம் 1:2. |
| இரட்சிப்பின் அதிபதி | - வசனம் 2:10. |
| அப்போஸ்தலர் | - வசனம் 3:1. |
| பிரதான ஆசாரியர் | - வசனம் 4:15. |
| இரட்சிப்பின் காரணர் | - வசனம் 5:9. |
| முன்னோடி | - வசனம் 6:20. |
| விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரும் | - வசனம் 12:1. |

# தேவனின் எண்ணமும் அவர் கைவண்ணமும் ...



### ஒரு வாலிபனின் வாழ்க்கைக் கதை

நான் ஒரு இந்து குடும்பத்தை சேர்ந்தவன் எனக்கு எட்டு வயது இருக்கும் போது எனது அப்பா மூலம் நான் தேவனை அறிந்துகொண்டேன். எங்கள் குடும்பம் இரட்சிக்கப்பட்டதின் நிமித்தம் எங்கள் உறவினர்கள் எங்கள் குடும்பத்தை ஒதுக்கி வைத்தார்கள். அப்போதும் நாங்கள் தேவனை விட்டு விடவில்லை. எங்களுக்கு மிகவும் உதவியவர் நோர்வூட் சபை ஊழியர் செல்வராஜா சகோதரன். அதற்கு பின், எங்களுக்கு இறைவனைப் பற்றியும் அவருடைய வசனத்தைப் பற்றியும் சகலத்தையும் கொடுத்தவர் விட்னராஜா சகோதரன். எங்களுக்கு நிறைய உதவிகளை தேவன் அவர் மூலமாக செய்தார். அவர் மூலமாக எங்கள் குடும்பம் தேவனின் ஆசீர்வாதங்கள் பலவற்றைப் பெற்றுக்கொண்டது. தேவன் எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரையும் தம்முடைய பிள்ளை-களாக ஏற்றுக்கொண்டார்.

அப்படியாக வளர்ந்த நான், தேவனை விட்டு பின்வாங்கிப்-போனேன். உலக காரியத்தில் நிறைய ஈடுபட்டேன். ஆண்டவர் என்னை விட்டு தூரம் போய்விட்டார் என்று எனக்கு தெரியவில்லை. எனக்கு விருப்பமா-னதையெல்லாம் செய்தேன். என் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு கீழ்படியாதிருந்தேன். நான் செய்வது தான் சரி என்றிருந்தேன். சபைக்கு சரியாக செல்லாதிருந்தேன். தேவன் பலமுறை என்னை சிட்சித்தும் நான் அவற்றை பொருட்படுத்தவில்லை. ஆனாலும் நான் அதில் கவனம் செலுத்தவில்லை. இப்படி செல்லும் போது என் வாழ்க்கையில் சந்தோஷம் இல்லை என உணர்ந்தேன்.

ஆனாலும் தேவனிடம் செல்ல-வில்லை. அப்போதும் தேவன் என்னைக் கைவிடவில்லை. அவர் எனக்கு உணர்த்திக்கொண்டே இருந்தார். அவர் கை என் மேல் இருந்தது என்று நான் இப்போது உணர்கிறேன்.

ஏனென்றால், அவ்வளவு பாவம் செய்தும் தேவன் என்னைப் பாதுகாத்து வந்தார். என் நண்பர்கள் மூலம், என் சகோதரர் மூலம், பிரசங்கத்தின் மூலம் தேவன் எனக்கு நிறைய நினைப்-பூட்டல்களை செய்தார். அப்படியிருந்தும் நான் கீழ்ப்படியவில்லை. அப்படி செல்லும் போது, தேவன் ஒருநாள் எனக்கு உணர்த்தினார். நான் இந்த உலகத்தில் எது முக்கியம் என்று இருந்தேனோ அது என்னைவிட்டு விலகிற்று. வேற்று மதத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுடன் கொண்டிருந்த தொடர்பை தேவன் என் வாழ்க்கையில் இருந்து எடுத்துப்போட்டார். இந்த உலகத்தில் எது மேன்மை என்று இருந்தேனோ, அதையெல்லாம் தேவன் எடுத்துப்போட்டார்.

அந்த சந்தர்ப்பத்தில் என் வாழ்க்கையை திருப்பிப்பார்த்தேன். தேவன் என் வாழ்க்கையில் இல்லை என்றதை உணர்ந்தேன். “ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்“ என்ற வார்த்தை எனக்கு ஞாபகம் வந்தது. அப்போது நான் நிறைய அழுதேன். தேவன் என்னைத்-தேற்றினார். நான் என் வாழ்க்கையில்

சந்தோஷம் அற்றவனாக இருந்த போது தேவன் என்னை நோக்கினார். அந்த காலகட்டத்தில் தான் மாதம்ப பகுதியில் வாலிபர் முகாம் நடந்தது (2014 செப்டெம்பர் 10-13). அதில் கலந்து கொள்ள நினைத்தேன். அதற்கும் நிறைய தடைகள் வந்த போதும் தேவன் அதில் கலந்து கொள்ள வைத்தார்.

அந்த சமயத்தில் தேவன் என்னோடு பேசினார். என்னுடைய பாவங்களை எனக்கு உணர்த்தினார். நெவில் சகோதரன் செய்த பிரசங்கம் எனக்கே தான் என்று நினைத்தேன். வெட்கப்பட்டேன். கண்ணீர் சிந்தினேன். ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்டேன். அவர் எனக்கு மன்னிப்பு கொடுத்தார். அந்த நாளை என் வாழ்க்கையில் மறக்க முடியாது. என்னுடைய சகல பாவங்களையும் தேவன் கையில் கொடுத்தேன். அந்த வாலிபர் முகாம் முடிந்து வரும்போது என்னை ஒரு புதிய மனிதனாக மாற்றினார் தேவன்.

தேவன் என்னுடைய பழைய பாவங்கள் அனைத்தையும் மன்னித்து-விட்டார். அதினால் நான் தேவனோடு இருக்கிறேன், என்னுடைய சகல பாவ-த்தையும் தேவன் மன்னித்து விட்டார் என்று முழு நம்பிக்கை எனக்கு உண்டு. என் வாழ்க்கையை மீட்ட தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆமென்.

உங்களையும் தேவன் நேசிக்கிறார். உங்கள் வாழ்க்கையில் உள்ள பாவத்தை தேவன் கையில் கொடுத்து விடுங்கள். அப்பொழுது தேவன் உங்களை விடுவிப்பார்.

நன்றி
சகோ. முருகநாதன்



## தேவ நியதிகளுக்கு கட்டுப்படும் பிராணிகள்

**கழுதை** என்னைக் கண்டு, இந்த மூன்றுதரம் எனக்கு விலகிற்று
எண்ணாகமம் 22: 27 - 33
2 பேதுரு 2: 16

அந்தப் **பசுக்கள்** பெத்ஷிமேசுக்குப் போகிற வழியிலே செவ்வையாய்ப் போய்.. 1 சாமுவேல் 6: 8 - 15

**சிங்கங்கள்** என்னைச்சேதப்படுத்தாத படிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்.
தானியேல் 6:22

யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய **மீனைக்** கர்த்தர் ஆயத்தப்படுத்தி இருந்தார்
யோனா 1: 17 2: 10

அந்தச் **சிங்கம்** பிரேதத்தைத் தின்னவுமில்லை, கழுதையை முறித்துப்போடவுமில்லை.
1 இராஜா 13: 28

உடனே, காட்டிலிருந்து இரண்டு **கரடிகள்** புறப்பட்டு வந்து, அவர்களில் நாற்பத்திரண்டு பிள்ளைகளைப் பீறிப்போட்டது. 2 இராஜா 2: 24

அங்கே உன்னைப் போஷிக்க, **காகங்களுக்குக்** கட்டளையிடுவேன் என்றார். 1 இராஜா 17: 4





# ஜெபத்தின் தேவையும் அவசியமும்.

லூக்கா 18: 1 – 8

சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்:

ஒரு பட்டணத்திலே ஒரு நீதிபதி இருந்தான். அவன் தேவனுக்கு பயப்படாதவனும் மனுஷரை மதியாதவ-னுமாயிருந்தான். அந்தப்பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள். அவள் அவனிடத்தில் போய்: எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று விண்ணப்பம் பண்ணினாள்.

வெகுநாள்வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது. பின்பு அவன்: நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்ய வேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்-கொண்டான் என்றார்.

பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள்.

அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடு-கிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமல் இருப்பாரோ?

சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும் மனுஷ குமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்.

பிதாவாகிய தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் மீட்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்படுகி-றோம் என்ற உன்னத விசுவாசத்தைக் கொண்ட ஒவ்வொருவரும் தினமும் தவறாமல் தேவனை நோக்கி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் செய்ய வேண்டிய ஒன்றே ஒன்று ஜெபமேயாகும்.

ஜெபத்தின் மூலம் நாம் தேவனோடு பேசுகின்றோம். இவ்வாறு இருந்த போதும் இன்று அநேக விசுவாசிகள் ஜெப ஜீவியத்தில் மிகவும் பெலவீன-மாகவே உள்ளனர். இதனை அறிந்தே கர்த்தராகிய தேவன் சோர்ந்து போகாமல் ஜெபிக்க வேண்டும் என்ற கூறியுள்ளார்.

சகோதர சகோதரிகளே! உங்க-ளுடைய ஜெபவாழ்வு இன்று எவ்வாறு உள்ளது? ஒருவேளை நீங்கள் ஜெபத்தில் சோர்ந்து போயிருந்தால் அது ஆரோக்கியமானதொரு செயல் அல்ல. தேவனுடைய பெரிதான கிருபையை உணர்ந்து ஜெபத்தில் உற்சாகப்படும் படி வேண்டிக்கொள்-கிறோம்.

எபிரெயர் 4:15,16 நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்-கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராய் இருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கு

இருக்கிறார்.

ஆதலால், நாம் இரக்கத்தைப்பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

எபிரெயர் 7:25 மேலும், தமது மூலமாய்த்தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.

ஏசாயா 40: 28 - 31 பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதும் இல்லை, இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்துமுடியாதது.

சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்.

இளைஞர் இளைப்படைந்து சோர்ந்து போவார்கள், வாலிபரும் இடறி விழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள் அவர்கள் ஓடினாலும் இளைப்பு அடையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.

ஜெபம் இல்லாவிட்டால் ஜெயம் இல்லை என்பதை உணர்ந்து ஜெபத்திற்கு ஆர்வம் காட்டுவோம். ஜெபிக்கிற மக்களை தேவனாகிய கர்த்தர் தேடுகிறார்.

நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன். எசேக்கியல் 22:30

ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லை என்று ஆச்சரியப்பட்டார், ஏசாயா 59:16

கர்த்தர் அவனை நோக்கி: நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சு விட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு என்றார். எசேக்கியேல் 9:4



இன்று எமது சபையிலும் தேசத்திலும் நாம் காண்கின்ற, கேட்கின்ற விடயங்களுக்காக ஜெபிக்க வேண்டும். அவ்வாறு ஜெபிக்காவிட்டால் அது பாவமாகும். "நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்;" அது எனக்கு தூரமாயிருப்பதாக. 1 சாமுவேல் 12:23.

எனவே தேவ ஜனங்களே இதுவரை ஜெபிக்காதவர்கள் அல்லது ஜெபத்தில் சோர்ந்து போயிருப்பவர்கள் தயவுசெய்து தேவனுக்குள் நம்மை திடப்படுத்திக்கொண்டு (1 சாமு 30:6) தேவனுடைய சித்தம் எமது வாழ்விலும் சபையிலும் தேசத்திலும் செய்யப்பட தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்க ஆயத்தப்படுவோம்; ஆயத்தப்படுவோம்.

மத்தேயு 6:9,10 நீங்கள் ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப் படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப்பூமியிலேயும் செய்யப்படுவதாக.

ஏசாயா 21:11,12 - சேயீரிலிருந்து என்னை நோக்கி: ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது? என்று கூப்பிட்டுக் கேட்க; அதற்கு ஜாமக்காரன்: விடியற்காலம் வருகிறது, இராக்-காலமும் வருகிறது; நீங்கள் கேட்க மனதானால் திரும்பிவந்து கேளுங்கள் என்று சொல்லுகிறான்.

எசேக்கியேல் 38:7 நீ ஆயத்தப்படு, உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து, நீ அவர்களுக்குக் காவலாளனாயிரு.

தேவன் தாமே உங்கள் ஒவ்வொரு-வரையும் தமது அளவிடப்பட முடியாத அன்பினால் நிறைத்து, ஜெப ஜீவியத்தில் உற்சாகப்படுத்துவாராக. தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.

சகோ. சேவியர்
வவுனியா



## எங்கள் ஐக்கியத்தில் இடம்பெறும் கூட்டங்கள்

**ஞாயிற்றுக்கிழமை**

மு.ப. 8.15 - ஞாயிறு பாடசாலை
மு.ப. 9.30 - ஆராதனை வேளை
பி.ப 1.30 - வாலிபர் கூட்டம்
பி.ப. 4.00 - சுவிசேஷக்கூட்டம் (சிங்கள மொழி)
பி.ப. 6.00 - சுவிசேஷக்கூட்டம் (ஆங்கில மொழி)

**செவ்வாய்க்கிழமை**

பி.ப 6.30 - சுவிசேஷக்கூட்டம் (தமிழ் மொழி)

**புதன் கிழமை**

பி.ப 6.00 - ஜெபக்கூட்டம்

**வெள்ளிக்கிழமை**

பி.ப 6.00 - வேத ஆராய்ச்சி

இக்கூட்டங்களில் பங்குபெற
உங்கள் அனைவரையும்
அழைக்கிறோம்!



# இராஜாக்கள்



இஸ்ரவேல் யூதா தேசங்களின் இராஜாக்கள் சவுல், தாவீது, சாலொமோன் என்பவர்கள்.

**இஸ்ரவேலின் இராஜாக்கள்.**:
முதலாம் யெரொபெயாம், நாதாப், பாஷா, ஏலா, சிம்ரி, திப்னி, உம்ரி, ஆகாப், அகசியா, யோராம், யேகூ, யோவாகாஸ், யோவாஸ், 02 ஆம் யெரொபெயாம், சகரியா, சல்லும், மெனாகேம், பெக்கா, பெகாகியா, ஒசெயா என்பவர்கள்.

**யுதாவின் இராஜாக்கள்** :
ரெகொபெயாம், அபியா, ஆசா, யோசாபாத், யோராம், அகசியா, அத்தாலியாள் (இராணி), யோவாஸ், அமத்சியா, அசரியா, உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா, மனாசே, ஆமோன், யோசியா, யோவாகாஸ், யோயாக்கீம், சிதேக்கியா என்பவர்கள்.

இந்த இராஜாக்களின் வரலாற்றை ஆராய்ந்து கற்று கொள்ளுவோம். சாலொமோனின் வரலாறு தொடங்கி கற்போம்.

- **சாலொமோன்**
  2 நாளாகமம் 1:1 - 9:31
  1 இராஜாக்கள் 1:1 - 11:43

- **சாலொமோன் அரசனாதல்,**

தாவீது அரசன் முதிர்ந்த கிழவனாய் படுக்கையிலேயே கிடந்தான். அவனை போர்த்தியபோதும் அவனுக்குக் குளிர் தாங்க முடியாதிருந்தான். எனவே தாவிதின் பணியாட்கள் இஸ்ரவேல் நாடு முழுவதிலும் அழகான ஒரு பெண்ணைத் தேடி, சூனேமியா நாட்டைச் சேர்ந்த அபிஷாகு என்னும் அழகிய பெண்ணைக் கண்டு அரசனிடம் கொண்டுவந்தார்கள். அவள் அரசனைக்கவனித்து அவனுக்கு வேண்டிய எல்லா ஏவல்களையும் செய்து வந்தாள். அந்த வேளையில் அரசன் தாவீதின் மகன் அதோனியா முன் வந்து, "நான் அரசனாவேன்" என்று சொல்லி, தன்னைத்தான் உயர்த்தினான். நீ இப்படிச் செய்வானேன் என்று தாவீது அவனை ஒருக்காலும் கடிந்துகொள்ளவில்லை.

தீர்க்கதரிசியான நாத்தான், சாலொமோனின் தாயாகிய பத்சேபாளிடம் போய், ஆகீத்தின் மகனாகிய அதோனியா எங்கள் தலைவனாகிய அரசனுக்குத் தெரியாமலேயே அரசனாகியதை நீ கேள்விப்படவில்லையா? எனச்சொல்லி இதைப்பற்றி தாவீதிடம் கேள் என்று அவளை ஏவி விட்டான். அவள் போய் இதைப்பற்றி கதைத்துக் கொண்டிருக்கும் போது இறைவாக்கினனான நாத்தானும் அந்த வேளை வந்து அதோனியா அரசனாவதை பற்றி கதைத்தான்.

அப்பொழுது அரசன் தாவீது அவளிடம் என்னை எல்லா ஆபத்துக்களில் இருந்தும் விடுவித்த கர்த்தர் வாழ்வது நிச்சயம் போல, இஸ்ரவேலின் இறைவனாகிய கர்த்தரின் பெயரால் எனக்குபின் உன் மகன் சாலொமோனே அரசனாவான். எனக்குப்பின் எனது இடத்தில் இருப்பான் என்று முன்பு உனக்கு ஆணையிட்டுச் சொன்னதை

நிறைவேற்றுவேன் என்பது நிச்சயம் என்று ஆணையிட்டான். அப்பொழுது தாவீது ஆசாரியனான சாதோக்கையும், இறைவாக்கினனான நாத்தானையும், யோய்தாவின் மகன் பெனாயாவையும் அழையுங்கள் என்றான். அவர்களிடம் என் மகன் சாலொமோனை என் சொந்தக் கோவேறு கழுதையில் ஏற்றி என் ஊழியக்காரருடன் அவனை கீகோனுக்கு அழைத்துப் போங்கள், அங்கே ஆசாரியனான சாதோக்கும், இறைவாக்கினன் நாத்தானும் அவனை இஸ்ரவேலின் அரசனாக அபிஷேகம் பண்ணட்டும் என்று சொன்னான்.

அப்படியே, சாலொமோனை கூட்டிக்கொன்டு சென்ற ஆசாரியனான சாதோக் பரிசுத்த கூடாரத்திலிருந்த தைலக்கொம்பை எடுத்து சாலொமோனை அபிஷேகம் பண்ணினான். எல்லா மக்களும் சாலொமோன் அரசன் நீடூழி வாழ்க என்றும் நாகசுரங்களை ஊதிக்கொண்டு நிலம் அதிரதக்க பெரும் குதூகலத்துடன் அவனுக்கு பின் சென்றார்கள்.

- **தாவீது சாலொமோனுக்கு கொடுத்த பொறுப்பு**:

பூமியில் உள்ள எல்லோரும் போகிற வழியில் நானும் போகப் போகிறேன். நீ திடன்கொண்டு புருஷனாயிரு. உனது இறைவனாகிய கர்த்தர் உனக்குச்செய்யும்படி கட்டளையிட்ட யாவையும் கைக்கொள். அவருடைய வழியிலேயே நட மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி, நீ உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும், நியாயங்களையும், சாட்சிகளையும் கைக்கொள் என்றான்.

எவர்களை தன்னோடு சேர்த்துக்கொள்ள வேண்டும், எவர்களை விட்டு வைக்காதிருக்க வேண்டும், எவர்களிடம் கவனமாய் நடந்து கொள்ள வேண்டும், எவர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டும் போன்ற அறிவுரைகளைச் சொன்னான்.

என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி, இப்போதும் எச்சரிக்கையாயிரு பரிசுத்த ஸ்தலமாக ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்குக் கர்த்தர் உன்னைத் தெரிந்துகொண்டார், நீ திடன்கொண்டு அதை நடப்பி என்று சொல்லி கர்த்தருடைய ஆலயத்து வேலைகள் அனைத்திற்கும் உரிய மாதிரியையும் கட்டளையையும் கொடுத்தான்.

சாலொமோனுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை போன்று தேவன் உங்களுக்கு கொடுத்துள்ள பொறுப்புகள் எவை?

- **சாலொமோன் ஞானத்தைக் கேட்டல்,**

இரவில் தேவன் சாலொமோனுக்கு காணப்பட்டு உனக்கு என்ன வேண்டுமோ அதை கேள், என்றார். சாலொமோன் தேவனிடம், நீர் எனது தகப்பன் தாவீதிக்கு உமது பெரிய இரக்கத்தைக் காட்டி, அவருடைய இடத்தில் என்னை அரசனாக்கினீர். இப்போழுதும் தேவனாகிய கர்த்தாவே! எனது தகப்பன் தாவீதிக்கு நீர் கொடுத்த வாக்குத்தம் நிறைவேறட்டும், ஏனெனில், பூமியின் புழுதிபோல் எண்ணிக்கையுடைய மக்களுக்கு என்னை அரசனாக்கியிருக்கிறீர். எனவே, இந்த மக்களை வழிநடத்துவதற்கு வேண்டிய ஞானத்தையும், அறிவையும் எனக்குத் தாரும். ஏனெனில், இப்பெருந்திரளான உமது மக்களை ஆட்சி செய்ய யாரால் முடியும்? எனப்பதிலளித்தான்.

தேவன் சாலொமோனிடம், நீ செல்வத்தையோ, செழிப்பையோ, கனத்தையோ, உன் பகைவர்களின் மரணத்தையோ, அல்லது உனக்கு நீண்ட ஆயுளையோ, கேட்கவில்லை, மாறாக என் மக்களை ஆளும்படி நான்

உன்னை அரசனாக்கினேன். நீ அவர்களை ஆளுவதற்கு ஞானத்தையும், அறிவையும் கேட்டிருக்கிறாய்.

இதுவே உனது இருதயத்தின் ஆசையாயிருந்தபடியால் உனக்கு முன்னிருந்த எந்த அரசனுக்கும் இல்லாத செல்வத்தையும், செழிப்பையும், கனத்தையும் உனக்குக் கொடுப்பேன் என்றார்.

இப்படியாக தேவன், நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று உங்களுக்கு சொன்னால் நீங்கள் என்னத்தை கேட்பீர்கள்?

- **ஆலயம் கட்டுவதற்கான ஆயத்தங்கள்**

கர்த்தருக்கு ஓர் ஆலயத்தைக்கட்ட வேண்டும் என்பதே சாலொமோனுக்கு தாவீது கொடுத்த கட்டளையும் அவனது பணியுமாய் இருந்தது. ஆலயத்தைக் கட்டும் வேலைக்கான பொன், வெள்ளிகளை தாவீது சேர்த்து வைத்திருந்தான். அந்த தங்கம், வெள்ளி, வெண்கலம், இரும்பு ஆகியவற்றால் வேலை செய்யக் கூடிய திறமையுள்ளவனும், ஊதா நிறம், செந்நிறம், நீலநூல் ஆகியவற்றால் வேலை செய்யக்கூடிய திறமையுள்ளவனும், செதுக்கு வேலை செய்வதில் அனுபவமுள்ளவனுமான ஒருவனை அனுப்பும் படி சாலொமோன் தீருவின் அரசன் ஈராமுக்கு ஒரு செய்தியை அனுப்பினான்.

அத்துடன், லீபனோனிலிருந்து கேதுரு, தேவதாரு, வாசனை மரங்களையும் அங்கிருந்த மரம் வெட்டுவதில் திறமையுள்ளவர்களையும் கூட சாலொமோன் ஈராம் ராஜாவிடம் இருந்து பெற்றுக்கொண்டான்.

தேவன் உனக்கு கொடுத்த பணியை செய்து முடிக்க தேவையான வளங்களை நீ சேர்க்கின்றாயா? வேதத்தைக் கற்கின்றாயா? ஊக்கமாய் ஜெபிப்பதன் மூலம் உன் விசுவாசத்தை வளர்க்கின்றாயா? ஆவியின் கனி உன்னிடம் உள்ளதா? தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் அணிந்து உள்ளாயா?

- சாலொமோன் ஆலயத்தைக் கட்டுதல்

சாலொமோன் தனது ஆட்சியின் நான்காம் வருடம் இரண்டாம் மாதமான சீப் மாதத்தில் எருசலேமில் உள்ள மோரியா என்னும் மலையில் ஆலயத்தைக் கட்ட ஆரம்பித்தான். பதினோராம் வருடம் எட்டாம் மாதமான பூல் மாதத்தில் ஆலயம் முற்றாக கட்டி முடிக்கப்பட்டது. சாலோமோன் இதைக் கட்டிமுடிக்க ஏழு வருடங்கள் சென்றன.



நீ பெற்ற பணியை செய்து முடிக்கும் வைராக்கியம் உனக்குண்டா?

அல்லது இலக்கை மறந்து வழி தவறி செல்கின்றாயா?

- **சாலொமோனிடம் சீபாவின் அரசியின் வருகை**

கர்த்தருடைய நாமத்தைக்குறித்து சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தி சேபாவின் ராஜஸ்திரீக்குக் கேள்வியானபோது அவள் கடினமான கேள்விகளால் அவனைச் சோதித்துப் பார்ப்பதற்காக அங்கு வந்தாள்.

அவள் தனது மனதில் இருந்த எல்லா விடயங்களைப்பற்றியும் அவனது கதைத்தாள். அவளுடைய எல்லாக்கேள்விகளுக்கும் சாலோமோன் பதில் கோடுத்தான். அவைகளில் ஒரு

கேள்வியை ஏனும் அவளுக்கு விளக்குவதற்கு அரசனுக்கு கடினமாய் இருக்கவில்லை. சீபாவின் அரசி சாலொமோனது எல்லா ஞானத்தையும், அவன் கட்டியிருந்த அரண்மனையையும், அவனது மேசையிலிருந்த உணவையும், அவன் அலுவலர்களையும், அவர்கள் பணியாட்களையும், அவர்கள் உடைகளையும், திராட்சை ரசம் பரிமாறுகிறவர்களையும், அவன் கர்த்தரின் ஆலயத்தின் செலுத்திய தகன காணிக்கைகளையும் கண்ட போது அவள் ஆச்சிரியத்தில் மூழ்கினாள்.

அத்துடன் அவள் அரசனுக்கு நூற்றிருபது தாலந்து தங்கத்தையும், பெருந்தொகையான வாசனைப் பொருட்களையும், விலைமதிப்புள்ள மாணிக்கக் கற்களையும் கொடுத்தாள்.

கர்த்தருக்குள்ளான உன் வாழ்க்கை மற்றவர்கள் கர்த்தரை அறிந்து கொள்ள எந்தளவுக்கு தாக்கஞ்செலுத்துகிறது?

- **சாலொமோனின் மனைவிகள்**

சாலொமோன் அரசன் பார்வோனின் மகளைத் தவிர மோவாபியரும், அம்மோனியரும், ஏதோமியரும், சீதோனியரும், ஏத்தியருமாகிய அந்நிய ஜாதியாரான அநேகம் பெண்களையும் ஆசைவைத்தான்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது அவர்கள் நிச்சயமாய்த் தங்கள் தேவர்களைப் பின் பற்றும்படி உங்கள் இருதயத்தை சாயப்பண்ணுவார்கள் என்று சொல்லி இருந்தும் சாலொமோன் அவர்கள்மேல் ஆசைவைத்து, அவர்களோடு ஐக்கியமாயிருந்தான். அவனுக்குப் பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள், அந்த பெண்கள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள்.

கர்த்தருடைய வார்த்தையை அசட்டை பண்ணி, கர்த்தர் விரும்பாததை செய்து, கர்த்தரை விட்டு விலகிப்போகின்றாயா? மனந்திரும்பி, கர்த்தரை விட்டு உன்னை வழுவி போகச்செய்யும் எல்லா பொல்லாப்பையும் விட்டுவிட்டு, மன்னிப்பைப் பெற்றுக்கொள் இப்போதே.

- **சாலொமோனின் நாளாந்த உணவு**

சாலொமோனுடைய பந்தியில் தினமும் தேவைப்பட்ட உணவு பொருட்கள்:

முப்பது கோர் தரமான மாவும், அறுபது கோர் மாவும், தொழுவத்தில் பராமரிக்கப்பட்ட பத்து மாடுகளும், இருபது பசும்புல் மேய்ந்த மாடுகளும், நூறு செம்மறியாடுகளும், வெள்ளாடுகளும், அத்துடன் மான்களும், சிறு மான்களும், கலை மான்களும், திறமான கொழுத்த கோழிகளும் ஆகும்.

கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மை ஆசீர்வதித்திருக்கும் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தையும் முழுமையாய் அனுபவிக்கின்றாயா?

- **சாலொமோனின் மரணம்**

சாலொமோன் எருசலேமில் இஸ்ரவேல் எல்லோருக்கும் மேலாக 40 வருடங்கள் அரசாண்டான். பின் அவன் தன் முற்பிதாக்களுடன் இறைப்பாறித் தன் தகப்பன் தாவீதின் பட்டணத்தில் அடக்கம் பண்ணப்பட்டான்.

உன் மரணத்தின் பின் நீ செல்வது எங்கே? தேவனிடம் செல்ல, ஆண்டவர் இயேசுவை மட்டுமே விசுவாசித்து ஏற்றுக்கொள்.

சகோ. சஞ்சீவன்



# உருவாட்டம் முதல் உருமாற்றம் வரை



மாற்கு 5: 1 - 20

**அறிமுகம்**

இவ்வேதபகுதியானது பிசாசு பிடித்து பெரும் வேதனை வாட்டத்தோடு இருந்த ஒருவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சந்தித்து குணமடைந்து தன் வாழ்வில் மாற்றத்தை அனுபவித்த கதையாகும். வாழ்வில் உண்மையான மாற்றம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சந்திப்பதால் மட்டுமே கிடைக்கும். வேறெதினாலும் வாழ்க்கையில் மாற்றத்தைக்கொண்டுவர முடியாது.

2 கொரிந்தியர் 5:17. இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

உங்களுக்கு வாழ்க்கையில் உண்மையான மாற்றம் வேண்டும் என்றால், நீங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை சந்திக்க வேண்டும். இம்மனிதன் குணமடைவதற்கு முன் இருந்த நிலைமையைப் பற்றிய விபரமானது, பாவத்தில் இருப்பவர்களுடைய நிலைமையை ஆவிக்குரிய கருத்தில் வெகுவாக ஒத்திருக்கிறது. அதேபோல, அவன் குணமடைந்ததற்கு பின்பதான விபரமும் ஒரு விசுவாசியில் காணப்பட வேண்டிய குணங்களை எடுத்துக்காட்டுகின்றன.

## வேதனைப்படுத்தப்பட்ட மனிதன்

**1. கல்லறை வாசி** - வசனம் 3

- இறந்த நிலை - எபேசியர் 2:1, ரோமர் 6:23
- மறைவான நிலை இரண்டாந்தர நிலை - மத்தேயு 23:27
- அருவருப்பான நிலை - யோவான் 11: 39
- பிரிக்கப்பட்ட நிலை - ஏசாயா 59:2
- பேய்த்தன்மையான நிலை - மாற்கு 5:2,3
- உக்கிச் சிதைந்துபோகும் நிலை - யோவான் 3:16

**2. சங்கிலி உடைப்பான்** - வசனம் 3,4

இவனைப்பற்றிய இரண்டாம் விபரமானது, இவன் விலங்குகளினாலும் சங்கிலி-களினாலும் கட்டப்பட்டிருந்தும் சற்று நேரத்திலேயே அவற்றை முறித்து தகர்த்து விடுபட்டுவிடுவான் என்பதே. அவனை அடக்குவதற்கு மனிதர்களால் செய்ய முடிந்ததெல்லாம் அவனை சங்கிலிகளால் கட்டுவதேயாகும். ஆனால் அவை சிறிது நேரத்துக்கு மட்டுமே உபகாரமாயிருந்தன. ஒருவனை மாற்றுவதற்கு மனிதனுடைய முயற்சிகள் போதாதவை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. மனிதனால் ஒருவனை முழுமையாக மாற்றிவிட முடியாது. அவன் செய்யக்கூடியது எல்லாம் சிற்றளவுக்கு கட்டுப்படுத்தக்கூடியது மட்டும் தான். கடைசியில் சாத்தான்

எல்லாவற்றையும் முறித்து உங்களை வறட்சியும் பாழுமான வனாந்தரத்துக்கு கொண்டு போய் விடுவான் (லூக்கா 8:29). மனிதனால் இரட்சிப்பைத் தரமுடியாது. இரட்சிப்பானது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாக மட்டுமே கிடைக்கும்.

அவராலேயன்றி (இயேசுவினாலேயன்றி) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. அப்போஸ்தலர் 4:12

மனிதனின் சித்தாந்தங்கள், மனிதனின் சொத்துக்கள், மனிதனை சந்தோஷிப்பிக்கும் சிற்றின்பங்கள் எனும் விலங்குகள், சங்கிலிகளாகிய மனிதனின் முயற்சிகளால் மனிதனை ஒருபோதும் இரட்சிக்க முடியாது

**3. மலை சஞ்சாரி** - வசனம் 5

இம்மனிதன் மலைகளில் காணப்பட்டான். நாம் வேதத்தில் வாசிக்கின்றோம் தேவாராதனைகள் குறிப்பாக விக்கிரகாராதனைகள் மலைகளின் மேல் நடைபெற்றதாக.

குன்றுகளையும், திரளான மலைகளையும் நம்புகிறது விருதா என்பது மெய் (எரே 3:23). மலைகளின் மேல் கிடைக்கும் ஒருவிதமான ஆவியின் அனுபவத்தை இது நமக்கு நினைவுபடுத்துகிறது. மலைகள், ஆவியிலான அல்லது உணர்ச்சியிலான உயர் அனுபத்தைக் குறிக்கிறது. ஆவி பூர்வமான அல்லது உணர்ச்சிபூர்வமான எந்த அனுபவத்தாலும் மனிதனுக்கு இரட்சிப்பு தரவோ அவனை மாற்றவோ முடியாது. இம்மனிதன், தனது மலை அனுபவத்தினால் ஏதாகிலும் உதவியை நாடிய போதும் எவ்வித உதவியும் அவனுக்கு கிட்டவில்லை.

இன்று மனிதர்கள் ஆன்மீக அனுபவத்தை நாடுகிறார்கள் ஆனால் அது வெறுமனே ஓர் தற்காலிக தீர்வை மட்டுமே தருகிறது. ஆகவே, எந்தவொரு மதம் சார் அனுபவமோ அல்லது ஆன்மீக அனுபவமோ வாழ்வில் உண்மையான மாற்றத்தைக் கொண்டுவர முடியாதவை என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்,

**4. தன்னழிப்பான்** (தன்னைத்தானே அழித்துக்கொள்பவன்) - வசனம் 5



நான்காவதாக இவன், தனக்குத்தானே கேடுண்டாக்கி பாதிப்பை ஏற்படுத்திக்கொண்டிருந்தான். இவன் கூக்குரலிட்டு, கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான். அவனது இந்த பரிதாப நிலை அவன் தன்னைத் தான் அழித்துக் கொள்ளும் நிலைக்கு உட்படுத்தியது. எவ்விதத்தில் பார்த்தாலும், பாவமும் தன்னைத்தானே அழிக்கச்செய்யக்கூடியது. கடைசியில், உங்கள் கல்லறை அனுபவம் மற்றும் மலை அனுபவம் ஆகிய இரண்டுமே உங்களைத்திக்கற்றவர்களாக்கி உங்களை அழிவுக்கு நேராய் வழிநடத்தும். எனவே கவனத்தில் கொள்ளுங்கள், பாவம் கடைசியில் உங்களை அழிக்கும்.

**5. மதரீதியாக கதைப்பவன்** - வசனம் 7

இம்மனிதன் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை சந்தித்த போது அவரைப்பற்றி

உயர்வாக சொன்னான். தேவனைப்பற்றி அறிவது உதவாது. தேவனை அறிவதே இரட்சிப்பைக் கொண்டுவரும். பாவத்தில் வாழும் அநேகர் தேவனை அறியாதவர்கள் என்றாலும் தேவனை பற்றிய அறிவு உள்ளவர்கள். அவர்கள், தங்கள் வாழ்க்கையில் தலையிட தேவனுக்கு இடங்கொடுக்காதவர்கள். பிசாசைப்பார்த்து இவனை விட்டு வெளியேறும் படி ஆண்டவர் இயேசு கிறிஸ்து சொன்ன போது இவன் மிக உயர்வான ஆவிக்குரிய பேச்சுக்களை பேசி தன் வாழ்க்கையில் தேவன் செல்வாக்கு செலுத்துவதைத் தவிர்க்க முயன்றான்.

அநேகர் மதம் சார்ந்து வாழ விரும்புகின்றனர் ஆனால் தம் வாழ்வு மாற விரும்புதில்லை. தேவனைத் தனிப்பட்ட முறையில் அறிந்து கொண்டு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடனான உறவுக்குள் வருவதால் மட்டுமே வாழ்வில் மாற்றம் வரும்.

அருமை சகோதரனே, சகோதரியே, பிசாசு பிடித்தவனுடைய விபரங்களையும் அதனூடாக, பாவி என்ற ரீதியில் நமது நிலையையும் நாம் பார்த்துள்ளோம். உங்கள் வாழ்வில் இவை இப்படியிருக்கின்றனவா எனவும் நீங்கள் இன்னமும் பாவத்தில் வாழ்கிறீர்களா எனவும் உங்கள் வாழ்வை ஆராய்ந்து பாருங்கள். உங்கள் வாழ்வின் நிலையும் இதைபோன்றது தானென்றால், உங்கள் வாழ்க்கையை மாற்றி உங்களுக்கு ஒரு புதிய ஆரம்பத்தையும் ஒரு புது வாழ்வையும் தரக்கூடிய ஒரே ஒருவரான ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் உங்கள் வாழ்வை அர்ப்பணிக்க இப்போதே முடிவு செய்யுங்கள்.

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாய் இருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.
2 கொரிந்தியர் 5:17



# நாவைக் காத்துக்கொள்

*சகோ. பௌவேந்தூர் விஜி, வவுனியா*

யாக்கோபு 3ம் அதிகாரத்தில் நாம் நாவைப் பற்றிய முக்கியமான விடயங்களைக் காண்கிறோம். நாவானது சிறிய உறுப்பாக இருந்தும், பொல்லாத, பாரிய செயல்களைச் செய்கிறது. நமது நாவைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கும் படி வேதம் நம்மை எச்சரிக்கிறது. ஆகவே அதன் தன்மைக்கு நாம் விட்டுக்கொடாமல் நாவை அடக்க வேண்டும்.

| | |
|---|---|
| உன் நாவு வார்த்தையில் தவறுகிறதா? | யாக் 3:2 |
| அது பெருமையானவைகளைப் பேசுகிறதா? | யாக் 3:5 |
| உன் நாவின் வார்த்தை மற்றவர்களை சுடும் நெருப்பா? | யாக் 3:6 |
| ஆயுள் நாட்களை அது கொளுத்திவிடுகிறதா? | |
| நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாய் இருக்கிறது. | யாக் 3:6 |
| அது நரக அக்கினிக்கு ஏதுவானதா? | |
| நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது. | யாக் 3:6 |
| உன் நாவு அநீதியால் நிறைந்திருக்கிறதா? யாக் 3:6 | |
| உன் முழு சரீரத்தையும் அது கறைப்படுத்துகிறதா? | யாக் 3:6 |
| உன்னால் அடக்க முடியாததா? | யாக் 3:6 |
| உன் நாவு சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததா? | யாக் 3:8 |
| உன் நாவு கசப்பான (கெட்ட) வார்த்தையை சுரக்கிறதா? | யாக் 3:11 |
| உன் நாவிலிருந்து சாப வார்த்தை வருகிறதா? | யாக் 3:10 |
| உன் நாவு உன்னை சிக்க வைக்கிறதா? | நீதி 6:2 |

மேற்குறிப்பிட்டபடி உன் நாவு இருக்கிறதா? எச்சரிக்கை, தேவன் விரும்பும் நாவு அதுவல்ல. இன்னும் சில வேதப்பகுதிகள் கீழே காண்போம்.

| | |
|---|---|
| உன் நாவு தேவனைத் துதிக்க வேண்டும் | யாக் 3:9 |
| சபிப்பவர்பளை ஆசீர்வதிக்கிற நாவாக | மத்தேயு 5:44 |
| நீதிமானாகிய உன் நாவு சுத்த வெள்ளியாக | நீதி 10:20 |
| ஜீவ ஊற்றைத்தருகின்ற நாவாக | நீதி 10:11 |
| ஞானத்தைப் பேசுகிற நாவாக | நீதி 10:31 |
| அநேகரைப் போஷிக்கும் நாவாக | நீதி 10:21 |
| பிரியமானவைகளை (தேவனுக்கு) பேசும் நாவாக | நீதி 10:32 |
| அறிவை உபயோகிக்கும் நாவாக | நீதி 15:2 |
| சத்தியத்தைப் பேசுகிற நாவாக | நீதி 8:7 |
| ஜீவனை விரும்பும் நாவாக | நீதி 18:21 |

இப்படியாகவே நம் நாவு இருக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார். நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு கணக்கு ஒப்புவிக் வேண்டும். ஆகவே பக்தி விருத்திக்கேதுவான நல்ல வார்த்தைகளை நாம் பேசுவோம். நாவை அடக்கி கர்த்தருக்குப் பிரியமான பிள்ளைகளாக, அவருடைய நிறைவான வளர்ச்சியை நோக்கி வளர நாம் கர்த்தருடைய சத்தியத்திற்கு கீழ்ப்படிவோம்.



# சந்தோஷம்

Dr. பாலு டேவிட்

யோவான் 14:27 சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்ப-தாக

யோவான் 15:11 என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்-கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவற்றை உங்களுக்குச் சொன்னேன்.

யோவான் 16:20 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுது புலம்பு-வீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.

என்னுடைய சந்தோஷத்தை உங்களுக்கு கொடுக்கிறேன்; உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். என்று சொன்னவர் ஒரு மனிதனல்ல. மண்ணிலே பிறந்து மரித்து மண்ணுக்கே போகின்ற ஒரு மனிதனல்ல. இந்த வார்த்தையை கூறினவர், சர்வலோகத்தையும் சிருஷ்டித்த தேவாதி தேவன். உன்னை-யும் என்னையும் சிருஷ்டித்த தேவாதி தேவன், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவானவர் இந்த அருமையான வார்த்தைகளை சொன்னார். யாருக்கு சொன்னார் என்று நாம் பார்க்கின்ற போது துக்கத்திலே அமிழ்ந்து கொண்டிருக்கிற தன்னுடைய சீஷர்களைப் பார்த்து சொன்னார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீஷர்களைப் பார்த்து நான் உங்களை விட்டு கடந்து போக போகிறேன் என்று சொன்ன போது சீஷர்களுடைய இருதயம் துக்கத்தால் நிறைந்திருந்தது.

மூன்று வருஷ காலமாக ஆண்ட-வராகிய இயேசு கிறிஸ்துவோடு கூட வாழ்ந்த சீஷர்கள், இப்பொழுது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர்களை விட்டுவிட்டு கடந்து போகிறார் என்ற செய்தியைக் கேட்ட உடன் அவர்கள் உள்ளம் கலங்கிற்று; துக்கத்தால் நிறைந்தது. அந்த துக்கம் சீஷர்களைப் பார்த்து, உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்; உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறினார்.

பிரியமானவர்களே, எப்பேர்ப்பட்ட துக்கத்தோடு எப்பேர்ப்பட்ட கவலை-யோடு இருக்கிறீர்களோ உங்களை உண்டாக்கின தேவாதி தேவன், உங்கள் உள்ளத்தில் இருக்கிற மனப்பாரம், மன அழுத்தம், துக்கம் எல்லாம் அவர் அறிவார். அறிவது மட்டுமல்ல மனிதன் தர முடியாத, இந்த உலகம் கொடுக்க முடியாத சமாதானத்தையும் சந்தோஷத்தை அவரால் கொடுக்க முடியும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து-வானர் எப்பேர்ப்பட்ட சந்தோஷத்தை

மனிதனுக்கு கொடுக்கின்றார்?

**1. பரலோக சந்தோஷம்**

லூக்கா 15: 7, 10. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தரும் சந்தோஷம் இந்த பூமியிலிருந்து வருகின்ற சந்தோஷமல்ல, பரலோகத்திலிருந்து கொடுக்கிற பரலோக சந்தோஷம்.

**2. மிகுந்த சந்தோஷம்**

லூக்கா 2:10. பயப்படாதிருங்கள்! இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கொடுக்கும் சந்தோஷம் மிகுந்த




சந்தோஷம். அது பரலோக சந்தோஷம் மட்டுமல்ல, அது மிகுந்த சந்தோஷம். யாருக்கு? எல்லா ஜனத்துக்கும். கிறிஸ்தவனானாலும், முஸ்லீமானாலும் இந்துவானாலும், உயர்ந்தவனோ தாழ்ந்தவனோ, படித்தவனோ படியாதவனோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கொடுக்கிறார்.

**3. நிறைவான சந்தோஷம்**

யோவான் 16:22. உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போட மாட்டான். யோவான் 16:24 கேளுங்கள், அப்போது உங்கள் சந்தோஷம் நிறைவாய் இருக்கும் படி பெற்றுக்கொள்வீர்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தரும் சந்தோஷத்தை ஒரு மனிதனாலும் எடுத்துக்கொள்ள முடியாது. அது நிறைவான சந்தோஷம்.

**4. பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷம்**

ரோமர் 14:17. தேவனது ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினால்உண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷம். இந்த உலக சந்தோஷம், ஆகாரம் நன்றாயிருந்தால் சந்தோஷம். நல்ல ருசியான ஆகாரமிருந்தால் சந்தோஷம். ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தருகிற சந்தோஷம், ஆகாரம் எப்படியிருந்தாலும் சரி, அது பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷம்.

**5. நித்திய சந்தோஷம்**

ஏசாயா 35:10 கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தருகிற சந்தோஷம், நித்தியமான சந்தோஷம் அது அநித்தியமானது அல்ல. இந்த உலகம் தருகிற சந்தோஷம், கொஞ்ச நாளிருக்கும். சினிமா பார்க்கும் போது மூன்று மணி நேரந்தான் சந்தோஷம். பிறகு அந்த சந்தோஷம் போய்விடும். மனிதன் போதை மருந்துகள் அருந்தும் போது அவனுக்கு சந்தோஷம். ஆனால் ஒரு சில மணி நேரங்கள், அதன் பிறகு போய் விடுகிறது. இன்னும்

அதிகமான துக்கத்துக்குள்ளாகிறான். ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கொடுக்கிற சந்தோஷம், நித்தியமான சந்தோஷம். இந்த உலகத்தை விட்டு போனாலும் கூட மனிதனுக்கு நித்தியமான சந்தோஷம் பரலோகத்திலே. அவன் சந்தோஷமாய் இருக்கக்கூடிய ஒரு வாழ்க்கையை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கொடுக்கிறார்.

### 6. சாராத சந்தோஷம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தருகிற சந்தோஷம், இவ்வுலகத்தில் உள்ள பொருளை சார்ந்ததோ, பணத்தை சார்ந்ததோ அல்லது ஆடு மாடுகளை சார்ந்ததோ சொத்தை சார்ந்ததோ அல்ல. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கொடுக்கிற சந்தோஷம், அது அவருடைய சந்தோஷம்.

ஆபகூக் 3:17,18 அத்திமரம் துளிர் விடாமற் போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவ மரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்.

பிரியமானவர்களே, இந்த உலகம் தருகிற சந்தோஷம் இப்படி சொல்லாது. என் வியாபாரத்தில் இழப்பு வந்தாலும் என் மாத வருமானம் குறைந்து போனாலும் எல்லாமே போனாலும் என் கர்த்தருக்குள் நான் மகிழ்ச்சியாய் இருப்பேன் என்ற சந்தோஷம் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கொடுக்கிற சந்தோஷம்.

### 7. சொல்லிமுடியாத சந்தோஷம்

1 பேதுரு 1: 8 இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய் களிகூர்ந்து, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கொடுக்கிற சந்தோஷம், சொல்லிமுடியாத மகிமையால் நிறைந்த சந்தோஷம். மனிதன் கொடுக்கிற சந்தோஷம், இந்த உலகம் கொடுக்கிற சந்தோஷம், சொல்லிவிடலாம். ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கொடுக்கிற சந்தோஷம் விவரிக்கவே முடியாதது. அது அளவுக்கடந்த சந்தோஷம். அது அறிந்து கொள்ள முடியாதது.

பிரியமானவர்களே, இப்பேர்ப்பட்ட சந்தோஷத்தை நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கொடுக்கிறார். இந்த சந்தோஷத்தை எப்படிப் பெற்றுக்கொள்ளுவாய்?

முதலாவது, பாவத்தை விட்டு மனந்திரும்ப வேண்டும். மனிதனுக்கு பொருள், பணம், பதவி, அந்தஸ்து இருந்தும் உள்ளத்திலே ஒரு துக்கம், ஒரு மனவருத்தம். பாவத்தை விட்டு மனந்திரும்பும் போது தான், அந்த பாவத்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிடும் போது தான், அந்த பாவங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு மன்னிக்கப்பட்ட பிறகு தான் அந்த மனுஷனுக்கு சந்தோஷம் கிடைக்கும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் வந்தால் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். ஆண்டவர் பாவங்களை மன்னிப்பார். சந்தோஷம் கொடுப்பார்.



# அடுத்த இதழில்...

## சத்தியமாய் சாத்தியமா?

சபையின் சரித்திரத்தில் சபைத்தலைவர்க்காய் சாகசங்கள்

## கேள்வி பதில்

நீங்கள் எழுதி அனுப்பும் கேள்விகளுக்கான பதில்கள்.

## குறுக்கெழுத்துப் புதிர்

வேதாகம புத்தகங்கள் பற்றிய

## புதுமையான புள்ளிவிபரங்கள்

இவற்றுடன் மேலும் பல கட்டுரைகள்...

**ஜீவ ஒளி**

ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்தும் நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.


பெயர்: ..........................................................................................

முகவரி: ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ஒப்பம்: ..........................................................................................



# ஜீவ ஒளி

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும் ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி அனுப்பிவையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:


Jeeva Oli

Christian Fellowship Centre

7, Vivekananda Road, Wellawatte,

Colombo 6.

Tel: 2581901

www.christianfellowshipcentre.com